புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 236 · 02-03-2026 · திங்கள் · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி- புதுச்சேரி

Volum 01 · Issue: 236 · 02-03-2026 · Monday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy-Puducherry

## ஈரான் போர்: இந்தியாவில் உள்ள வெளிநாட்டு பயணிகள் விசாவை நீட்டித்துக்கொள்ள அறிவுறுத்தல்

புது டெல்லி: மார்ச்.2–

ஈரான் மற்றும் மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் போர் பதற்றம் காரணமாக விமானங்கள் ரத்து செய்யப்பட்டதை அடுத்து, இந்தியாவிலுள்ள வெளிநாட்டினர் விசா நீட்டிப்புகளுக்கு தொடர்புடைய அதிகாரிகளை அணுகுமாறு வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஈரான் போர் சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள பயண இடையூறுகளால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டினருக்கு வெளியுறவு அமைச்சகம் (MEA) முக்கிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இது குறித்து வெளியான அறிக்கையில், "மேற்கு ஆசிய பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக தங்கள் பயணத் திட்டங்களை மாற்ற வேண்டியிருக்கும் இந்தியாவில் உள்ள அனைத்து வெளிநாட்டினரும், தங்கள் விசா நீட்டிப்பு அல்லது தங்குதலை முறைப்படுத்த உதவி தேவைப்பட்டால், அருகிலுள்ள வெளிநாட்டினர் பிராந்திய பதிவு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவிகளை வழங்குவார்கள்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் ரத்து காரணமாக இந்தியாவில் எத்தனை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சிக்கித் தவிக்கின்றனர் என்பது உடனடியாகத் தெரியவில்லை. சனிக்கிழமை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானைத் தாக்கிய பின்னர், மத்திய கிழக்கு முழுவதும் மற்றும் இந்தியா உட்பட பிற நாடுகளில் நூற்றுக்கணக்கான விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 1) மேலும் 22 சர்வதேச சேவைகளை ரத்து செய்துள்ளதாக ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. இதனால் மேற்கு ஆசிய நெருக்கடி காரணமாக இதுவரை ரத்து செய்யப்பட்ட வெளிநாட்டு விமானங்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் வான்வெளி கட்டுப்பாடுகள் காரணமாக இந்திய விமான நிறுவனங்கள் மார்ச் 1 ஆம் தேதி 444 சர்வதேச விமானங்களை ரத்து செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## பெரியார், அண்ணா, கருணாநிதி காட்டிய பாதையில் பயணித்து வெல்வோம் ஒன்றாக: ஸ்டாலின் சூளுரை




சென்னை: மார்ச்.2–

பெரியார், அண்ணா, கருணாநிதி நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக! என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

தனது 73வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "தமிழும் தமிழ் நாடும் நம் உயிர்! அவற்றைக் காப்பது நம் கடமை!.

உழைப்பைத் தவிர வேறொன்று அறியேன் எனச் சொல்லி, இளமை முதல் 73ம் வயது காணும் இந்நாள் வரையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணியாற்றுவதே என் வாழ் நாள் கடமை எனச் செயலாற்றி வருகிறேன். தமிழும் தமிழ் நாடும் தலை நிமிர்ந்த வரலாற்றில் நான் சிறு தொண்டனாய் இருந்தாலும், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் பெருந்தொண்டாற்றிடவே நினைக்கிறேன்.

அந்த உறுதியோடு தான், "Dravidian Modelல் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில், இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன். கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் போய்ச் சேர்ந்துள்ளது திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும், சாதனைகளும்!

தனிக்குணம் கொண்ட தமிழர் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்; நாட்டிற்கே புத்தொளியை வழங்குகின்றனர் என்று புகழும் வகையில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது! நம் தமிழினத்தின் லட்சியப் பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக் கூடாது; நம் தலை யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது! சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத்திறத்தால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும். இதற்காக என்னை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்வேன்.

இதுவே என் பிறந்தநாள் உறுதிமொழி! பெரியார் அண்ணா கருணாநிதி ஆகியோர் நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக!" என்று தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் தவெக தலைவர் தேசியக்கொடி ஏற்றுவது உறுதி..

### ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கே ஏ செங்கோட்டையன் உறுதி..



ஈரோடு. மார்ச். 02

சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, டிவிகே தலைவர் விஜய் முதல்வராக மூவர்ணக் கொடியை சென்னை தலைமைச் செயலகத்தில் ஏற்றுவார் என்று முன்னாள் அமைச்சரும் டிவிகே தலைமை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்தார்.

ஈரோட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாநகர் மாவட்டச் செயலாளர் விஜய் பாலாஜி தலைமையில் நடைபெற்ற டிவிகே ஊழியர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், அதிமுக என்னைத் தூக்கியெறிந்ததார். ஆனால் விஜய் எனக்கு ஆதரவளித்தார். இன்று, மக்கள் எப்போதும் நல்லவர்களை ஆதரிப்பதால் நீங்கள் அனைவரும் என் பின்னால் இருந்தீர்கள். பெரியார் அண்ணா எம்ஜிஆர் ஜெயலலிதாவுடன் நான் பயணம் செய்தேன். அதனால், ஜெயலலிதாவின் படத்தை என் பையில் வைத்திருந்தேன். அப்போதும் விஜய் என்னை வரவேற்றார். அவர் மட்டுமே தமிழகத்தின் நிரந்தர முதல்வராக வருவார். எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதாவைப் போல திமுகவை தோற்கடிக்கும் வலிமை அவருக்கு மட்டுமே உள்ளது. அவர் மட்டுமே ஜனநாயகத்தைப் பாதுகாப்பார்.

நாம் ஆட்சியைக் கைப்பற்றப் போகிறோம் என்பதற்காகவே அனைவரும் எங்களைத் தாக்கினர். மாநிலத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் விஜய் மட்டுமே ஒரே வேட்பாளர், ஏனெனில் அவரது முகம் மட்டுமே மக்கள் நினைவில் இருக்கும். மாவட்டத்தில் உள்ள 8 தொகுதிகளிலும் நாம் மட்டுமே வெற்றி பெறுவோம். நான் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதாவுடன் சுற்றுப்பயணம் செய்தேன். எனக்கு கள நிலவரம் தெரியும். ஆனால், வெற்றி பெற நாம் ஒற்றுமையாக உழைக்க வேண்டும். விஜய் நமக்குக் கிடைத்தது கடவுள் கொடுத்த பரிசு, எனவே வரும் தேர்தலில் புதிய சாதனை படைப்போம்.

கட்சியின் கொள்கை தலைவரான பெரியாரின் பிறப்பிடமான ஈரோடு கிழக்குத் தொகுதியில் விஜய் போட்டியிட வேண்டும் என்றும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 டிவிகே வேட்பாளர்களின் வெற்றிக்காக பாடுபடுவது என்றும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு, அவர் பதிலளிக்கையில் பிரதமர் உட்பட கிட்டத்தட்ட அனைத்து தலைவர்களும் ஒரு உரையை எழுதி உரை நிகழ்த்துவார்கள். அதைத்தான் விஜய் கடைப்பிடிக்கிறார். எங்கள் தொண்டர்கள் சிங்கக்குட்டிகள். அவர்கள் திமுகவை தோற்கடிப்பார்கள் என்றார்.

## பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை: மார்ச்.2–

இன்று பொதுத்தேர்வை எழுதவுள்ள 12ம் வகுப்பு மாணவர்களுக்கும், எதிர்வரும் 11ம் தேதி முதல் பொதுத்தேர்வு எழுதவுள்ள 10ம் வகுப்பு மாணவர்களுக்கும் வாழ்த்துகள். பதற்றமின்றித் தேர்வை எதிர்கொண்டு வெற்றி பெறுங்கள். உங்களுக்கான வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. உறுதியுடன் படித்திடும் உங்களுக்கு " ஊக்கமளித்து உயர்த்திட நமது திராவிட மாடல் அரசு இருக்கிறது

## முதல்வர் ஸ்டாலினின் பிறந்த நாளுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

சென்னை: மார்ச்.2–

முதல்வர் மு.க. ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழகம் வந்துள்ள பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். மேலும் அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு பிறந்த நாள் நல்வாழ்த்துகள். அவர் நீண்ட ஆயுளோடும் நல்ல ஆரோக்கியத்தோடும் வாழ வாழ்த்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

பிரதமரின் வாழ்த்துக்கு முதல்வர் தனது சமூக ஊடக பதிவில் நன்றி தெரிவித்துள்ளார். மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்ட வாழ்த்துப் பதிவில், "தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இனிய பிறந்த நாள் நல் வாழ்த்துகள். நீண்ட ஆயுளோடும் ஆரோக்கியத்தோடும் வாழ் வாழ்த்துகள்" என குறிப்பிட்டுள்ளார்.

கேரள முதல்வர் பினராயி விஜயன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, காங்கிரஸ் தலைவர் கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, பாமக தலைவர் அன்புமணி, தேமுதிக தலைவர் பிரேமலதா, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், நடிகர் ரஜினிகாந்த் உள்ளிட்டோர் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



புதுச்சேரி வந்தடைந்தார் பிரதமர் மோடி. விமான நிலையத்தில் முதல்வர் ரங்கசாமி வரவேற்பு.

## மத்திய பா.ஜ.க ஆட்சியில் தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகம் பிரதமர் மோடி



மதுரை, மார்ச்.2–

மதுரை விமான நிலையத்தில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்றுள்ள பிரதமர் மோடி வணக்கம் எனக்கூறி தனது உரையை தொடங்கினார். அப்போது பிரதமர் மோடி பேசியதாவது: மதுரையை காக்கும் மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரருக்கு தலைவணங்குகிறேன், அனைவருக்கும் அருள் கிடைக்கட்டும்.நேற்று அடிக்கல் நாட்டப்பட்ட ரூ.4,400 கோடி மதிப்பிலான திட்டங்களால் வேலைவாய்ப்பு, சிறந்த கட்டுமானங்கள் கிடைக்கும்.சந்தைகளை சென்றடையும் விவசாயிகள், சுற்றுலாப் பயணிகள் என அனைவருக்கும் உகந்த சாலைகள் கிடைக்கும். புனிதமான மதுரை மண்ணிற்கு வந்ததை மிகப்பெரிய கவுரவமாக பார்க்கிறேன். 2014ம் ஆண்டு முதல் 4,000 கி.மீக்கு தேசிய நெடுஞ் சாலைகள் போடப் பட்டுள்ளது.கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. தேசிய சாலைகளை மேம்படுத்துவதன் மூலம் ராமேஸ்வரம், தனுஷ்கோடிக்கு செல்பவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்.தமிழ் நாட்டின் நெடுஞ் சாலைத்துறைக்கு மத்திய அரசு அதிக நிதி வழங்கி உள்ளது. தமிழ்நாட்டிற்கான சாலைதிட்டங்களில் மத்திய அரசு அதிக முதலீடு செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இந்திய ரயில்வே துறை பல சாதனைகளை புரிந்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் வழங்கப் பட்டதைவிட தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு 9 மடங்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.880 கோடி, பாஜக ஆட்சியில் ரூ7600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டதால் 1,300 கி.மீக்கு அதிகமாக ரெயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.",

## கல்வியாளர் பிரிவில் 8 மாவட்ட கூட்டம் கோவை பீளமேடு பாஜக கட்சி மாவட்ட அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது.




தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் கோவை மாநகர் மாவட்ட தலைவர் திரு ரமேஷ்குமார் அவர்கள் அனைத்து பிரிவுகளின் மாநில அமைப்பாளர் திரு கே டி ராகவன் கல்வியாளர் பிரிவின் மாநில அமைப்பாளர் திரு கே ஆர் நந்தகுமார் கோவை கல்வியாளர் பிரிவு பெருங்கோட்ட பொறுப்பாளர் திருமதி ஷர்மிளா ராமானந்த் மற்றும் மாநிலச் செயலாளர் திரு பழனிச்சாமி கல்வியாளர் பிரிவு மாவட்டத் தலைவர் ஏஞ்சல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதரின் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாட அறிவித்ததை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள மணிமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதரின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாவட்ட ஆட்சிததலைவர் சரவணன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் சாலை தவவளன், மாநகராட்சி உதவி ஆணையர் சண்முகம், செய்தி மக்கள் தொடர்பு துஜற உதவி இயக்குனர் பாலசுப்பிரமணயன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் சுதாகர், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இ.எஸ் . கல்வியில் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் தேசிய அறிவியல் தின விழா

விழுப்புரம் மார்ச் 02

விழுப்புரம் இ.எஸ் கல்வி குழுமத்தின் ஓர் அங்கமான இ.எஸ் கல்வியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் தேசிய அறிவியல் தின விழா 2026 நடைபெற்றது.




நிகழ்ச்சிக்கு இ.எஸ் கல்வி குழுமத்தின் தலைவர் செல்வமணி தலைமை தாங்கினார். இ.எஸ் கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் தே.செந்தல்முருகன் அனை வரையும் வரவேற்றார். இவ் விழாவிற்கு சிறப்பழைப் பாளராக அறிஞர் அண்ணா அரசுக் கலை (ம) அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் சிவகுமார் முனைவர் சிவராமன் துணை பேராசிரியர் மதன்மோகன் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி விரிவுரையாளர் சச்சிதானந்தம் விரிவுரையாளர் . மணிவர்மன் அவர்களும் விழாவை தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் சி.அய்யனார், ஆர்.சண்முகசாமி, ச.சுகதேவ், தமிழ்செல்வி, அ.அருள் மாவட்டச் செயலாளர் வே. பாலமுருகன் பூமிகலைக் குழுமேனாள் மாவட்ட தலைவர் ஜி.சேகர் மாவட்ட கல்விக்குழு பேராசிரியர் கே. பூபதி அவர்களும், மேனாள் மாநிலத் தலைவர் முனைவர் சு.தினகரன் அவர்களும், மாவட்டத் தலைவர் எஸ். சிவமுருகன் மாவட்ட நிர்வாகிகள் க.செவ்வந்தி, சு. தென்னரசு, சு.சுமதி, ஜெ. ஜெயபாஸ்கர், ஷர்மிளாதேவி, அறிவியல் பிரச்சார உபக்குழு ஒருங்கிணைப்பாளர் சே.முருகன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கு.ராஜ்குமார் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து அறிவியல் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் கருத்துகளை வழங்கினார்கள். இதில் பூமிகலைக்குழுவின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் இ.ஸ் கல்வியியல் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கட்டுரை போட்டியும் நடத்தினார்கள் இதில் மாநிலத் தலைவர் மருத்துவர் த. திருநாவுக்கரசு பரிசளித்து பாராட்டுரை வழங்கினார். மேலும் இஎஸ் கல்வியியல் கல்லூரி மாணவர்களின் கற்பித்தல் கற்றல் துணைக்கருவிகளும் காட்சிப்படுத்தப்பட்டதை பார்வையிடல் செய்தனர். இவ்விழாவில் இ .எஸ். பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் இந்திரா கல்லூரியின் நிர்வாக அதிகாரி குப்புசாமி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து 700 மாணவ மாணவிகளும், இ.எஸ். கல்வியியல் கல்லூரி துணை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட பொருளாளர் சங்கரநாராயணன் நன்றியுரை வழங்கினார்.

# பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைத்த எம்பி கணபதி ராஜ்குமார்..




திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் கோயம்புத்தூரில் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் வார்டு எண் 58,59,60 ல் பல்வேறு பணி துவக்க விழாவினை தொடங்கி வைத்தார் . உடன் திமுக முத்தனம் பாளையம் பகுதி கழகச் செயலாளர் குமார்.மாமன்ற உறுப்பினர்கள் கோமதி குமார்.பந்தல் சாமிநாதன்.காந்திமதி ஈஸ்வரமூர்த்தி.வார்டு செயலாளர் ராஜேந்திரன்.

கேசவன்.சிவசாமி.பகுதி அவைத் தலைவர் ஜெகநாதன். மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் ஊர் பொதுமக்கள் மாநகராட்சி அதிகாரிகள் பங்கேற்றனர் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் அவர்களுக்கு பொதுமக்கள் சார்பில் உற்சாகமாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

# திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற உள்ள மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வு விவரங்கள் : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்




திருவள்ளூர் மார்ச் 02 :

திருவள்ளூர் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டு,முதலாமாண்டு அரசு பொதுத் தேர்வு 02.03..2026 முதல் 27.03.2026 வரையில் நடைபெறுகிறது. தேர்வில், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி, பார்வையற்றோர் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 16 மாணவர்கள், பூந்தமல்லி அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளி தேர்வு மையத்தில் தேர்வு எழுதுகின்றனர். அதில் கி.திருநாவுக்கரசு என்ற மாணவன் தேர்வினை கணினி மூலமாக தேர்வு எழுதுகிறார். 02.03.2026 அன்று (திங்கள் கிழமை) நடைபெறும் தேர்வில் 271 ஆசிரியர்கள் சொல்வதை எழுதுபவராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வில் 117 மையங்களில் 14119 மாணவர்களும், 15512 மாணவிகளும் ஆக மொத்தம் 29631 மாணவ,மாணவியர்கள் தேர்வு எழுதுகின்றனர்.+1 கி ஸி ஸி ணி கி ஸி மாணவர்களில் 929 மாணவர்களும் 436 மாணவிகளும் ஆக மொத்தம் 1365 தேர்வர்கள் தேர்வினை எழுதுகின்றனர். தனித்தேர்வு 18 மையங்களில் 1110 மாணவர்களும், 1029 மாணவிகளும் மற்றும் இரண்டாம் பாலினத்தவர் 2 ஆக மொத்தம் 2141 தேர்வர்கள் தேர்வினை எழுதுகின்றனர். மொத்த வினாத்தாள் கட்டுக்காப்பு மையம் 5 மொத்த தேர்வு மையங்கள் 117 மொத்த வழித்தடங்கள் 29 வழக்கமான மாணவர்கள் 29631 +1 ARREAR CANDIDATE - 1365 PRIVATE CANDIDATE 2141 மொத்த மாணவர்கள் 33137 ஆகும்.

இத்தேர்வுக்காக முதன்மை கண்காணிப்பாளர்கள் 117, துறை அலுவலர்கள் 117, கூடுதல் முதன்மை கண்காணிப்பாளர்கள், கூடுதல் துறை அலுவலர்கள் 12, நிலையான,பறக்கும் படையினர் 250, அறை கண்காணிப்பாளர்கள் 1750, சொல்வதை எழுதுபவர்கள் 271, மொத்தம் 2517 ஆக மொத்தம் 2517 ஆசிரியர்கள் இக்கல்வியாண்டில் தேர்வு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மாவட்ட ஆட்சியர் மு . பிரதாப் தெரிவித்துள்ளார்.

# 7500 கடிதம் மூலம் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்த கோவை மக்கள்!!




கோவை: மார்ச்02

தமிழகத்தின் திராவிட மாடல் முதலமைச்சரின் சீரிய முயற்சியால் தமிழக மக்களுக்கு பல விதமான நலத்திட்டங்களை கொடுத்தார்.இதில் 118 நலத்திட்டங்கள் மக்கள் பயனடைந்துள்ளனர். இந்த பயனாளிகள் தமிழக முதல்வருக்கு மார்ச் 1 பிறந்தநாள் வாழ்த்துக்களுடன் நன்றி செலுத்தும் வகையில் கடிதம் எழுதி உள்ளனர் இந்த கடிதம் முதலமைச்சருக்கு 1ம் தேதி கிடைக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

சமூகத்திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் சார்பாக அரசாங்கம் வழங்கக்கூடிய நான் முதல்வன் திட்டம் மூலம் 1000 க்கும் மேற்பட்ட பெண்களுக்கு பயிற்சிகள் அளித்தும் அவர்கள் தொழில் முனைவோர்களாக உருவாக்கி பிளாஸ்டிக் போன்ற மண்ணுக்கும் மனிதனுக்கும் கேடு விளைவிக்கக்கூடிய பல பொருட்களை தடை செய்யக்கூடிய அளவிற்கு உற்பத்தி செய்த பல பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழக முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு உலக மகளிர் தின நிகழ்ச்சி முழு ஏற்பாடுகள் செய்துள்ளோம்.இதன் ஒரு பகுதியாக முதல்வருக்கு நன்றி செலுத்தும் வகையில் 7500 பெண்கள் ஒன்றிணைந்து 7500 கடித வாழ்த்து அனுப்பி முதல்வருக்கு பிறந்தநாள் வாழ்த்து நன்றி தெரிவித்தனர்.

# வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு பாராட்டுக்கள் வாழ்த்துக்கள் கூறி வருகின்றன.

அரியலூர் மாவட்டம் ஜாக்கிர் உசேன் அவர்கள் கடந்து வந்த பாதை ஊரக வளர்ச்சித்துறை அரியலூர் ஒன்றியத்தில் கருணை அடிப்படையில் முதன் முதல் 1731993 இளநிலை உதவியாளராக பணிகள் சேர்ந்து ஐந்து துறை தேர்வுகள் தேர்ச்சி பெற்று உதவியாளராக பதவி உயர்வு பெற்று பிறகு முன்னுரிமை அடிப்படையில் மேலாளர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் பணிபுரிந்து 2016 ஆண்டு வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற்று 10 ஆண்டுகள் வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் பணிபுரிந்து அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 6 ஒன்றியங்களிலும் பணிபுரிந்து அடுத்த மாதம் 313 2026 பணி ஓய்வு பெற உள்ளார் அரியலூரில் ஆரம்பித்து ஆண்டிமடத்தில் பணி ஓய்வு பெற உள்ளார் இவர் மேலும் சிறந்து நல்லா இருக்க வேண்டும் என அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் வாழ்த்தி வருகின்றன.



# நமச்சிவாய கோஷத்துடன் ஜலகண்டேஸ்வரர் கோயில் தேர்த் திருவிழா..!



வந்தவாசி, மார்ச் 02:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் மாசி மக பிரமோற்சவ விழாவின் 9 ஆம் நாள் தேர்த் திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. ஜலகண்டேஸ்வரர் தேர், அம்பாள் தேர், விநாயகர் தேர் என மூன்று தேர்கள் மாட வீதிகளில் வலம் வந்தது. விநாயகர் தேர் ரதப்பட்டறையில் வந்தது. மற்ற இரண்டு தேர்கள் மேளதாளத்துடன் வீதியுலா வந்தனர். சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். மேலும் இந்த தேர்த் திருவிழாவில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

மேலும் தீயணைப்பு துறையினர், அறநிலையத் துறை அதிகாரிகள் மற்றும் மின்வாரிய அலுவலர்கள் உடன் வந்தனர். ஆங்காங்கே அன்னதானம் நிகழ்வும் வழங்கப்பட்டது.

# திருவண்ணாமலையில் இன்று பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் கோவில் நிர்வாகம் அறிவிப்பு",

"திருவண்ணாமலை: மார்ச்.–2

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் மலையே சிவனாக வணங்கப்படும் 14 கிலோ மீட்டர் தூரம் உள்ள அண்ணாமலையை மாதம் தோறும் வரும் பவுர்ணமி தினத்தில் பல லட்சம் பக்தர்கள் வலம் வந்து வழிபடுவது வழக்கம். மாசி மாதத்திற்கான பவுர்ணமி இன்று மாலை 6.29 மணிக்கு தொடங்கி நாளை (செவ்வாய்க்கிழமை) மாலை 5.52 மணிக்கு நிறைவு பெறுகிறது.இந்த நேரம் பவுர்ணமி கிரிவலம் வர உகந்த நேரமாக அருணாசலேஸ்வரர் கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.",



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் உள்ள அன்னை தெரசா முதியோர் இல்லத்தில் இன்று தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் நி. சுதாகரன், அவர்களின் ஏற்பாட்டில் அன்னை தெரேசா முதியோர் இல்லத்தில் காலை உணவாக பிரட் வழங்கப்பட்டது இதில் கழக வழக்கறிஞர்கள் சுசில்குமார், மணிகண்டன், கமலநாதன், பத்மராஜா, ஆனந்தகுமார், சத்தியசீலன், பாலா, காயத்ரி ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம்

கிருஷ்ணகிரி: மார்ச்.2–

தமிழ்நாடு கிராம ஊராட்சியில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் மற்றும் தூய்மை பணியாளர் தூய்மை காவலர் சங்கத்தின் மாநில கூட்டமைப்பு தலைவர் எம் செல்வம் தலைமையில் வருகிற 3.3.2026 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மேல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில்உள்ளஇரண்டாயிரத்துக்கு பின் பணி அமர்த்தபட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் ஊதியம் சம்பந்தமாகவும் டி என் ஆர் டிவெப்சைட்டில்பதிவுசெய்வதற்காகவும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் உண்ணாவிரதப்போராட்டம் நடைபெற இருப்பதால் அனைத்து மாநில மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கூட்டமைப்பு தலைவர் எம் செல்வம் அவருடைய உத்தரவின் பேரில் அன்போடுகேட்டுக்கொள்கிறோம் இப்படிக்கு அனைத்து மாநில கூட்டமைப்பு சங்கம்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

## ஈழ அண்ணல் மாவை சோ.சேனாதிராசா எனும் நூலினை அமைச்சர் க.லட்சுமிநாராயணன் வெளியிட புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் வி.முத்து பெற்றுக்கொண்டார்....



புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற உலகத் தாய்மொழி நாள் விழா,பாவாணர் பிறந்தநாள் விழா, நூல் வெளியீட்டு விழா என முப்பெரும் விழாவில் பேராசிரியர் முனைவர் பாஞ்.இராமலிங்கம் அவர்கள் எழுதிய "ஈழ அண்ணல் மாவை. கோ.சேனாதிராசா" எனும் நூலினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் க.லட்சுமி நாராயணன் அவர்கள் வெளியிட புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து பெற்று பெற்றுக்கொண்டார்.உடன் தமிழ்ச் சங்கச் செயலர் சீனு.மோகன் தாசு, நூலாசிரியர் பாஞ். இராமலிங்கம், பொருளர் மு. அருள்செல்வம், துணைத்தலைவர் ப.திருநாவுக்கரசு, தமிழ்மாமணி முனைவர் க.தமிழமல்லன், பேராசிரியர் முனைவர் இர.ஹேம மாலினி, முனைவர் இரா.அருள்ராஜ், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் அ.சிவேந்திரன், கவிஞர் இர.ஆனந்தராசன், கிஷோர் ஆகியோர் உள்ளனர்.

## மாசிமக தீர்த்தவாரியில் பங்கேற்கும் திண்டிவனம் அலர்மேல் மங்கா சமேத ஸ்ரீநிவாசப்பெருமாளுக்கு சிருங்கேரி சாரதாம்பாள் கோவிலில் வரவேற்பு அளிக்கப்படுகிறது.



புதுச்சேரி, மார்ச்.2–

மாசிமக தீர்த்தவாரியில் பங்கேற்கும் திண்டிவனம் அலர்மேல் மங்கா சமேத ஸ்ரீநிவாசப்பெருமாளுக்கு சிருங்கேரி சாரதாம்பாள் கோவிலில் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அலர்மேல் மங்கா சமேத ஸ்ரீநிவாசப் பெருமாள் மாசிமக உற்சவ கமிட்டியின் கவுரவத் தலைவர் வேங்கடேச ராமானுஜதாசர் ,மாசிமகம் உற்சவத்தையொட்டி, திண்டிவனம் நல்லிய கோடன் நகர் அலர்மேல் மங்கா சமேத ஸ்ரீநிவாசப் பெருமாள் சுவாமிக்கு வரும் 2ம் தேதி மாலை 5:30 மணிக்கு புதுச்சேரி நூறடி சிருங்கேரி மடம் சாரதாம்பாள் கோவிலில் வரவேற்பு அளிக்கப்படுகிறது.திருமஞ்சனம் கண்டருளி சிறப்பு அலங்காரத்துடன், புதுச்சேரி வடமுகத்து வகுப்பு பேரி செட்டியார் திருமண மண்டபத்தில் சுவாமி தங்குகிறார். தொடர்ந்து, 3ம் தேதி புதுச்சேரி வைத்திக் குப்பம் கடல் தீர்த்தவாரியில், காலை 8:30 மணிக்கு ஸ்ரீநிவாசப் பெருமாள் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

மாலை 3:00 மணிக்கு வடமுகத்து வகுப்பு (பேரி) செட்டியார் திருமண மண்டபம் தங்குகிறார். அன்று மாலை 7:00 மணி முதல் 8:00 மணிக்குள் ஊஞ்சல் வைபவம் நடக்கிறது. 4ம் தேதி, காலை 10:30 மணிக்குமேல் சிறப்பு திருக்கல்யாண வைபவம் நடக்கிறது.

மாலை 6:00 மணிக்கு சேஷ வாகனத்தில் சுவாமி புறப்பாடாகி, நேரு வீதி, திரு வீதி வழியாக பக்தர்களுக்கு காட்சி கொடுத்து, இரவு வடமுகத்து வகுப்பு (பேரி) செட்டியார் திருமண மண்டபத்தில் தங்குகிறார். 5ம் தேதி, காலை 10:00 மணிக்கு லோக ஷேமத்தை முன்னிட்டு மஹா சுதர்சன ஹோமம் நடக்கிறது என்றார்




புதுச்சேரி மாவட்டத்தில் இண்டாஸ் அறக்கட்டளை சார்பில் இரத்தக் கசிவு நோயல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக பேக்டர் 8 மருந்து காரணிகள் மற்றும் பிசியோதெரபி உபகரணம் வழங்கும் நிகழ்ச்சி 28.02.2026 இன்று நடைபெற்றது, நாடு முழுவதும் 44 திட்ட அலுவலகங்கள் மூலம் 22 மாநிலங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெருபவர்களுக்கு இலவசமாக தங்குமிடம்,ஊட்டசத்து நிறைந்த உணவு, மற்றும் ஆற்றுப்படுத்துதல் செய்து வரும் இண்டாஸ் அறக்கட்டளை சார்பில் சேவை செய்து வருகிறது அதன்படி புதுச்சேரி மாவட்டம் hemophilia chapter society, பாண்டிச்சேரி 605009. இண்டாஸ் அறக்கட்டளை மூலம் இரத்தக்கசிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக பேக்டர் 8 மருந்து காரணிகள் மற்றும் பிசியோதெரபி உபகரணம் வழங்கும் முகாம் நடைபெற்றது இதில் சுமார் 100 கணக்கான நோயாளிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். மேலும் நிகழ்ச்சிக்கு பாண்டிச்சேரி hemophilia chepter society தலைவி டாக்டர்.நலினி மற்றும் சசிகலா தலைமை தாங்கினார், இதனை தொடர்ந்து ,இதில் சென்னை இண்டாஸ் அறக்கட்டளையின் திட்ட இணை ஒருங்கிணைப்பாளர் S.பரத், மற்றும் அலுவலக உதவியாளர் Mr.அவினாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வணிக பயன்பாடுகளுக்கான சமையல் சிலிண்டர் விலை உயர்வு

சென்னை: மார்ச்.2–

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்களை கருத்தில் கொண்டு எண்ணெய் நிறுவனங்களே சிலிண்டர் விலையை தீர்மானித்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனையடுத்து எண்ணெய் நிறுவனங்கள் சிலிண்டர் விலையை தீர்மானிக்கின்றன.அந்த வகையில், மார்ச் மாதத்திற்கான வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிகப் பயன்பாட்டு சிலிண்டரின் விலை ரூ.29.50 உயர்ந்து ரூ.1,929 க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் 50 ரூபாய் உயர்ந்த நிலையில் இம்மாதமும் வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வீட்டு உபயோகத்திற்கான 14 கிலோ எடை கொண்ட சமையல் சிலிண்டர் விலையில் எந்த மாற்றமுமின்றி ரூ.868.50 க்கு விற்பனையாகிறது. ",

## கழகத் தலைவர் பிறந்தநாள் அமைப்பாளர் சிவா நேரில் வாழ்த்து!





சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் விழாவில் நமது மாநிலக் கழக அமைப்பாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திருமிகு. இரா. சிவா அவர்கள் நேரில் சென்று வாழ்த்துக்களை தெரிவித்தார். அப்போது சட்டமன்ற உறுப்பினர் சம்பத், காலாப்பட்டு செந்தில், உருளையன்பேட்டை தொகுதி செயலாளர் சக்திவேல் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் முதலியார்பேட்டை தொகுதி நிர்வாகிகள் பட்டியல்: ஆர் எல் வெங்கட்ராமன் வெளியிட்டார்.



புதுச்சேரி, மார்ச்.2–

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த மாதம் பதினாறு தொகுதிகளுக்கான தலைவர்களின் பட்டியல் வெளியிடப் பட்டது. அதில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது. இவற்றில் கடந்த வாரம் ஏனாம் தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள். அறிவிக்கப் பட்டனர். அதனை தொடர்ந்து தற்போது புதுச்சேரி நகர பகுதியை ஒட்டியுள்ள முதலியார்பேட்டை தொகுதி தலைவராக நியமிக்கப்பட்ட கி. பீட்டர் தலைமையில் தொகுதி நிர்வாகிகள் 13 பேரும், தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் 15 பேரும் மொத்தம் 28 பேர் கொண்ட தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அறிவிக்கப் பட்டுள்ளனர்.



A. பீட்டர்

புதுச்சேரி முதலியார் பேட்டை தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பட்டியல்.!!!.

தலைவர் : A. பீட்டர். துணைத் தலைவர் கள் : 1.V.தண்டபாணி. 2.ஆறுமுகம். பொதுச்செயலாளர் : 1.D.கணேஷ் பொருளாளர் : 1.நித்யா . செயலாளர்கள் : 1.E.சுபாஷ். 2.ஸ்ரீனிவாசன். இணைச் செயலாளர்கள் : 1.செறில். 2.J.சதீஷ்.

உதவி செயலாளர்கள் : 1.சரவணன் . 2.செல்வம் . துணை செயலாளர்கள்: 1.S.கருணாகரன் .2.A.மணிகண்டன். முதலியார்பேட்டைதொகுதி செயற்குழு உறுப்பினர்கள். 1.R. சுரேஷ் . 2.S.விக்னேஷ் . 3.R.அன்பு. 4.M.சந்துரு. 5.J.பாபு 6.R.சந்துரு. 7.S.குமார். 8.K.பாலச்சந்திரம். 9.R.நாராயணன். 10.M.சதீஷ். 11.H.ஹரி. 12.R.சந்தோஷ். 13.அசோகன் . 14.L.அருணாச்சலம். 15.S.வெங்கடேசன். மேற்கண்டவாறு 28 பேர் கொண்ட முதலியார்பேட்டை தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களை ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் என்ற முறையில் வெளியிட்டுள்ளேன் என்பதனை இதன் மூலம் தெரிவித்து கொள்கிறேன்.

## திருவள்ளூர் அருகே இரண்டு வீடுகளின் பூட்டை உடைத்து 12 சவரன் நகை, வெள்ளிப் பொருட்கள் மற்றும் 40 ஆயிரம் ரொக்கம் கொள்ளை வழக்கில் ஒருவர் கைது : 8 நகைகள் பறிமுதல்

திருவள்ளூர் மார்ச் 02 :

திருவள்ளூர் மாவட்டம் மணவாளநகர் அடுத்த போளிவாக்க்ம் பகுதியைச் சேர்ந்த சுந்தர் என்பவர் வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு பீரோவிலிருந்த 2 சவரன் தங்கம், 250 கிராம் வெள்ளிப் பொருட்கள் மற்றும் 30 ஆயிரம் ரூபாய் பணம் கொள்ளைபோனது. அதேபோல் இதே பகுதியைச் சேர்ந்தவர் முனுசாமி தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் செங்குன்றம் பகுதியில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று விட்டு திரும்பி வந்து பார்த்தபோது முன்பக்க கதவு உடைக்கப்பட்டு பீரோவிலிருந்த 10 சவரன் தங்க நகைகள் மற்றும் 10 ஆயிரம் ரூபாய் மாயமானது தெரிய வந்தது.

இதுகுறித்து சுந்தர், முனுசாமி ஆகிய இருவரும் கொடுத்த புகாரின்பேரில் மணவாளநகர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். அங்குள்ள சிசிடிவி கேமரா ஆய்வு செய்து அதில் பதிவான காட்சிகளைக் கொண்டு சென்னை கேகே நகர் பகுதியை சேர்ந்த சிலம்பரசன் என்பவரை கைது செய்து விசாரணை நடத்தினர். ஏற்கனவே இவன் மீது திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் திருட்டு வழக்குகள் நிலுவையில் இருப்பதும் பெரிய வந்தது. கைது செய்யப்பட்ட சிலம்பரசனிடம் இருந்து எட்டு சவரன் நகைகளை பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## பிரதமர் வருகைக்கு எதிர்ப்பு: புதுச்சேரி மாநில மகிளா காங்கிரஸ் தலைவர் நிஷா முன்னெச்சரிக்கை கைது!



புதுச்சேரி: மார்ச்.2–

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நேற்று புதுச்சேரிக்கு வருகை தருவதை முன்னிட்டு, அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் திட்டமிட்டிருந்த புதுச்சேரி மாநில மகிளா காங்கிரஸ் தலைவர் நிஷா அவர்களைக் காவல் துறையினர் நேற்று காலை முன்னெச்சரிக்கையாகக் கைது செய்தனர்.

பிரதமரின் வருகையை எதிர்த்து மகிளா காங்கிரஸ் சார்பில் போராட்டங்கள் நடத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிஷா அவர்கள் வெளியிட்டிருந்த வீடியோவில் பின்வரும் போராட்ட முறைகளைக் குறிப்பிட்டிருந்தார்: பிரதமர் வரும் வழியில் கருப்புக் கொடி காட்டுவது. எதிர்ப்பின் அடையாளமாக வானில் கருப்பு நிற பலூன்களை பறக்கவிடுவது.

பிரதமரின் வருகையையொட்டி புதுச்சேரியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், போராட்டங்கள் மூலம் பாதுகாப்பு விதிமீறல்கள் அல்லது அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில், இன்று காலை நிஷா அவர்களின் இல்லத்திற்குச் சென்ற காவல்துறையினர் அவரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் (PreventiveArrest) கைது செய்தனர்.

இந்தக் கைதிற்கு காங்கிரஸ் கட்சியினர் மற்றும் அதன் கூட்டணி கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். தங்களது ஜனநாயக ரீதியிலான போராட்ட உரிமையை அரசு நசுக்குவதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.





ஈரோடு அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில், நடைபெற்ற வாழ்க்கை கல்வி மற்றும் உயர்கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பெண் குழந்தைகள் காப்போம்,,, பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி உறுதிமொழி ஏற்றார். அவருடன் மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அலுவலர் அ. சுகுமார் மற்றும் ஆட்சியர் அலுவலக பணியாளர்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் உறுதிமொழி ஏற்றனர்.



முதல்வர் ஸ்டாலின். பிறந்தநாள் விழா விழுப்புரம் மாவட்டம். மேல்மலையனூர் வட்டம் வளத்தி ஊராட்சியில் முதல்வர் 73 பிறந்தநாள் அன்று ஏழை மக்களுக்கு கேக் வெட்டி இனிப்பை வழங்கினார் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் பெருந்தலைவர் நெடுஞ்செழியன் கண்மணி வழங்கினார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தர்பூசணி மோர் இனிப்புகள் நலத்திட்ட உதவிகள் தூய்மை பணியாளர்கள் பணியாளர்களுக்கு காய்கறிகள் வழங்கி மகிழ்ச்சி அடைந்தனர்.

## மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் தமிழர்களின்,, பாதுகாப்பை உறுதிசெய்க இ.பி.எஸ். வலியுறுத்தல் ,

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து வளைகுடா நாடுகளில் பதட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் வான் எல்லைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் துபாய் விமான நிலையம் மூடப்பட்டுள்ளதால் விமான போக்குவரத்து கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.இதனால் ஈரான், துபாய், அபுதாபி, சவூதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மற்றும் அமெரிக்காவில் வசித்துவரும் இந்தியர்கள் நாடு திரும்ப முடியாமல் கடும் அவதி அடைந்துள்ளனர். தமிழர்கள் அதிகம் வசிக்கும் கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளிலும் பதட்டம் ஏற்பட்டுள்ளது. வான் எல்லை மூடப்பட்டதன் காரணமாக ஏர் இந்தியா, இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் அங்கு வசிக்கும் தமிழர்களும் இந்தியாவுக்கு வர முடியாமல் தவிக்கிறார்கள்.இதையடுத்து சவூதி அரேபியா, குவைத் நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கான உதவி எண்களை இந்திய தூதரகம் அறிவித்துள்ளது. அவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இதனிடையே, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதட்டமான சூழலை கருத்திற்கொண்டு, அங்கு வசிக்கும் மற்றும் பணிபுரியும் நம் இந்தியர்கள் மற்றும் தமிழக மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.அங்கு வசிக்கும் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார். ",

# அரியலூர் வைத்தியநாதசுவாமி கோவிலில் மாசிமக தேரோட்டம் கோலாகலமாக நடந்தது.



அரியலூர் – சிவனே முன் நின்று நந்தியம் பெருமானுக்கு திருமணம் செய்து வைத்த புனித தலமான வைத்தியநாத சுவாமி கோவிலில் மாசி மக தேரோட்டம் கோலாகலமாக நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து ஸ்வாமி தரிசனம் செய்தனர்.

அரியலூர் மாவட்டம் திருமழப்பாடியில் கொள்ளிடம் கரையோரத்தில் அமைந்துள்ள அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற புனித தலமான வைத்தியநாத சுவாமி ஆலயத்தில் ஆண்டு தோறும் மாசி மக தேரோட்ட விழா கோலா கலமாக நடத்தப்படும். இந்த ஆண்டுக்கான விழா, கடந்த 21ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு அபிஷேக ஆராதனைகள், வசந்த உத்சவம் மற்றும் பல்வேறு அலங்காரங்களில் சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார் விழாவின் முக்கிய நிகழ்வான மாசி மக தேரோட்டம் நேற்று நடைபெற்றது. விழாவையொட்டி வைத்தியநாத சுவாமி மற்றும் அம்பாளுக்கு பால் தயிர் இளநீர் உள்ளிட்ட 14 வகையான பொருட்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாரதனை காண்பிக்கப்பட்டது இதனையடுத்து புத்தாடை உடுத்தி பூக்களால் அலங்கரிக்கப்பட்ட வைத்தியநாத சுவாமி மற்றும் அம்பாள் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார் அப்போது அங்கு கூடி இருந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஓம் நமசிவாய என முழக்கமிட்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர் முக்கிய வீதிகளின் வழியாக தேரோட்டம் நடைபெற்று வைத்திய நாதசுவாமி ஆலயத்தில் முன்பு தேரானது நிலை கொண்டது

தேரோட்டம் நிகழ்வில் அரியலூர், கடலூர் தஞ்சாவூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வடம்பிடித்து தேரை இழுத்து சென்றனர்.

இதைத் தொடர்ந்து தீர்த்தவாரி விழா நாளை நடைபெறுகிறது.

# சேலம் டூ பெங்களூரு NH-44ல் வேகமெடுத்த 6 வழிச் சாலை பணிகள்



சேலம். மார்ச்.2–

சேலத்தில் இருந்து தர்மபுரி வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர் மலைப் பாதை என்பது மிகவும் சிக்கலான வழித்தடமாக பார்க்கப்படுகிறது.

இப்பகுதியில் விபத்துகளை தடுக்கும் வகையில் உயர்மட்ட பாலம் கட்டும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில், சில புகைப்படங்கள் வெளியாகி கவனம் பெற்றுள்ளன.

தொப்பூர் மலைப் பாதை பயணம் என்றாலே வாகன ஓட்டிகள் சற்று கலக்கம் ஏற்படத் தான் செய்யும். அந்த அளவிற்கு தொடர் விபத்துகள் ஏற்பட்டு உயிர் பலி வாங்கியிருக்கிறது. இதுதொடர்பான புள்ளி விவரங்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. 11 ஆண்டுகளில் 960க்கும் மேற்பட்ட விபத்துகள், 300க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன. இதன் பின்னணியில் குறுகலான சாலைகள், ஏற்ற இறக்கங்கள் உடன் கூர்மையான வளைவுகள் நிறைந்த பாதை சுட்டிக் காட்டப்பட்டது.தொப்பூர் மலைப் பாதையில் முன்னெச்சரிக்கை

இந்தியாவின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை என்றால் அது NH 44 ஆகும். இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில் சேலம் தர்மபுரி இடையில் தொப்பூர் மலைப் பாதை அமைந்திருக்கிறது. விபத்துகளை தடுக்கும் வகையில் தொப்பூர் டோல்கேட்டில் ஒலிபெருக்கி மூலம் வாகன ஓட்டிகளுக்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதிவேகத்தில் செல்லக்கூடாது என வழிகாட்டுகின்றனர். மேலும் அதிக எண்ணிக்கையில் வேகத்தடைகள் அமைக்கப்பட்டன.

ரூ.775 கோடியில் தர்மபுரி உயர்மட்ட பாலம்: இருப்பினும் தொப்பூர் மலைப் பாதையில் நிகழும் விபத்துகளை முழுவதுமாக குறைக்க முடியவில்லை. இந்த சூழலில் தான் NHAI எனப்படும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் புதிய திட்டத்தை கையிலெடுத்தது. அதாவது, 775 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்ட பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதன் தூரம் 6.60 கிலோமீட்டர். இரு மார்க்கங்களிலும் 3 வழிச் சாலையாக அமைக்கப்படுகிறது. இதில் தரை வழி பாலம், சர்வீஸ் சாலைகளும் கட்டப்படுகின்றன. இடையில் யு வடிவ பாலம் அமைக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் நிலம் கையகப்படுத்துதல்இதற்காக சேலம் மாவட்டத்தில் 1.70 ஹெக்டேர் நிலமும், வனத்துறையிடம் இருந்து 13 ஹெக்டேர் நிலமும் கையகப்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல்கட்ட பணிகள் தொடங்கிய நிலையில், தூண்கள் அமைப்பது, உயர்மட்ட அடித்தளம் அமைப்பது, வலுவான கான்கிரீட் தளத்தை கட்டமைப்பது போன்ற வேலைகள் முடுக்கி விடப்பட்டன. கனரக வாகனங்கள் இரவு பகல் பாராமல் தொடர்ந்து வேலை செய்து வருகின்றன.

தொப்பூர் உயர்மட்ட பாலம் கட்டுமானப் பணிகள் பாலம் அமையவுள்ள வழித்தடத்தில் உள்ள பாறைகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போதைய கட்டுமானப் பணிகள் காரணமாக ஆங்காங்கு போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் போதிய வெளிச்சம் கிடைக்காது என்பதால் ஒளிரக்கூடிய பட்டைகள் தேவைப்படும் இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. திலிப் பில்ட்கான் லிமிடெட் (DBL) நிறுவனம் தொப்பூர் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

சேலம் பெங்களூரு ரூட்டில் பாதுகாப்பான பயணம்: சமீபத்தில் சேலம் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உயர்மட்ட பாலப் பணிகள் தொடர்பான புகைப்படங்கள் வெளியாகின. அதில் சாலையின் இருபுறமும் மஞ்சள் நிற கேன்கள் வைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தூண்களும், உயர்மட்ட பாலத்திற்கான கான்கிரீட்டும் அமைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. சாலையோரத்தில் கான்கிரீட் அடித்தளங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை படிப்படியாக கிரேன்கள் மூலம் தூண்களின் மேல் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். இந்த பாலம் பயன்பாட்டிற்கு வந்துவிட்டால் சேலத்தில் இருந்து பெங்களூருவிற்கு வாகன ஓட்டிகள் மிகவும் பாதுகாப்பான மற்றும் விரைவான பயணத்தை மேற்கொள்ளலாம்.

# மருதாடு நூலகத்தில் வாசிப்பும் நேசிப்பும் கருத்தரங்கம்..!




வந்தவாசி, மார்ச் 02:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மருதாடு கிளை நூலகத்தில் "வாசிப்பும் நேசிப்பும்" மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கிளை நூலகர் ஜா.தமீம் ((பொ) தலைமை தாங்கினார். பிரதம தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர் பு.அரிகரன், பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூக ஆர்வலர் புண்ணிய கோட்டி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, வாசிப்பும் நேசிப்பும் என்ற தலைப்பில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு தகவல்களை வழங்கினார். மேலும் புத்தக வாசிப்பு பற்றிய விழிப்புணர்வு ஓவியப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் புதுமண தம்பதிகள் பு.அரிகரன் க.பிரியா ஆகியோர் நூலகர் ஜா. தமீம் அவர்களிடம் ரூபாய் 1001 செலுத்தி நூலக புரவலர்களாக இணைந்தனர். இறுதியில் நூலக பொறுப்பாளர் பிரேமலதா நன்றி கூறினார்.

# 116 கிலோ புகையிலை பொருட்கள் காருடன் பறிமுதல்



கிருஷ்ணகிரி, மார்ச்.2–

ஓசூர் வழியாக கடத்த முயன்ற, 116 கிலோ புகையிலை பொருட்கள் காருடன் பறிமுதல் செய்யப் பட்டது. இது தொடர் பாக, இருவரை போலீசார் கைது செய்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சிப்காட் போலீசார், ஜூஜூவாடி சோதனைச் சாவடி அருகே நேற்று முன்தினம் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, பெங்களூருவில் இருந்து ஓசூர் நோக்கி வந்த பியட் பியஸ்டா காரை நிறுத்தி சோதனையிட்டதில், 116 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருந்தன. அவற்றின் மதிப்பு, 82 ஆயிரத்து, 440 ரூபாய். புகையிலை பொருட்களுடன், காரையும் போலீசார் பறிமுதல் செய்தனர். காரில் இருந்த கிருஷ்ணகிரி மாவட்டம், குருபரப்பள்ளி அருகே உள்ள சோமநாதபுரத்தை சேர்ந்த முகமது தவுசிப், 32, அப்துல் ரகுமான், 45, ஆகிய இருவரையும் போலீசார் கைதுசெய்தனர். விசாரணையில், புகையிலை பொருட்கள் பெங்களூருவில் இருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் குருபரப்பள்ளிக்கு கடத்த முயன்றது தெரியவந்தது.

## வெப்பத்தை தணிக்கும் விதமாக
### 2026 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி முதல், ஜின் 30 ஆம் தேதி வரை 04 மாதங்களுக்கு பழச்சாறு மற்றும் மோர் வழங்கும் நிகழ்ச்சி!!!




திருப்பூர்: மார்ச்02

திருப்பூர் மாநகர போக்குவரத்து காவல் துறைசார்பில் வழங்கப்பட்டது. திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அவர்களின் அறிவுரையின் பேரில், திருப்பூர் மாநகர போக்குவரத்து காவல் துறையினர்களுக்கு, கோடை கால வெப்பத்தை தணிக்கும் விதமாக 2026 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி முதல், ஜீன் 30 ஆம் தேதி வரை 04 மாதங்களுக்கு பழச்சாறு மற்றும் மோர் வழங்கும் நிகழ்ச்சி 01.03.2026 ஆம் தேதி திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அலுவலக போக்குவரத்து சந்திப்பில் அனைத்து போக்குவரத்து காவலர்கள் முதல்ஆய்வாளர் வரை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாநகர போக்குவரத்து காவல், உதவி ஆணையர் அ.சேகர், கே.வி.ஆர். நகர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் பெ. வெங்கடாஜலம், கொங்குநகர் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் க.பெ.பழனிச்சாமி மற்றும் போக்குவரத்து காவலர்கள் கலந்து கொண்டனர்.

# "நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்" கூட்டணி குறித்து ராமதாஸ் 3ந் தேதி அறிவிப்பு?",

"திண்டிவனம்: மார்ச்.2–

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அவரது மகன் அன்புமணிக்கும் இடையே கட்சி யாருக்கு சொந்தம் என்ற போட்டி நிலவி வருகிறது. இருவரும் தனித்தனி அணியாக செயல்பட்டு வருகிறார்கள். இந்தநிலையில் அன்புமணி அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில் இணைந்து விட்டார். ஆனால் ராமதாஸ் தரப்பு பா.ம.க. எந்த அணிக்கு செல்வது என்ற முடிவு எடுக்க முடியாத நிலை உள்ளது. தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. வந்தால் நாங்கள் வெளியேறி விடுவோம் என அக்கூட்டணியில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி கூறி விட்டது. அ.தி.மு.க. கூட்டணியில் அன்புமணி இடம்பெற்று உள்ளதால் அக் கூட்டணிக்கும் ராமதாஸ் தரப்பு பா.ம.க. செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே யாருடன் கூட்டணி அமைப்பது என்பது தொடர்பாக மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகளிடம் கருத்துக்களை கேட்டு வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன் ராமதாஸ் தொண்டர்களுக்கு கடிதம் எழுதினார். அதில் நமது இலக்கை அடைவதற்கான வாகனம் அருகே வந்து விட்டது என கூறி இருந்தார். மேலும் பிப்ரவரி 28 ந்தேதி கூட்டணி அறிவிப்பு இருக்கும் என்றும் கூறி இருந்தார். ஆனால் நேற்று ராமதாஸ் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. இந்த நிலையில் நேற்று தைலாபுரம் வந்த பா.ம.க. கவுரவத் தலைவர் ஜி.கே. மணி நிருபர்களிடம் கூறும் போது, கூட்டணி பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவரை இறுதி முடிவு எட்டப் படவில்லை. யாருடன் கூட்டணி என முடிவெடுக்கவில்லை என்றார். இதனால் தொண்டர்கள் குழப்பத்தில் இருந்து வருகிறார்கள். இதற்கிடையே வருகிற 3ந்தேதி (செவ்வாய்க்கிழமை) ராமதாஸ் யாருடன் கூட்டணி என்பது குறித்த அறிவிப்பை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளை காலை 10 மணிக்கு திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞர் சங்கம், மகளிர் சங்கம், மாணவர் சங்கம், பாட்டாளி சமூக ஊடக பேரவை, மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், நகர, மாநகர, பகுதி நிர்வாகிகள் பங்கேற்கும் கலந்தாய்வு கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என டாக்டர் ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார். எனவே அன்று கூட்டணி அறிவிப்பை வெளியிட வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.",

# கோவை மாதம்பட்டி எம் ஆர் எம் கார்டனில் கிரீன் சிட்டி டெவலப்பர்ஸ் - பில்டர்ஸ்ன் 17ம் ஆண்டு துவக்க விழா!!!




49 மனைகள் பரப்பளவில் மிகப் பிரம்மாண்டமான வீட்டுமனைகள் திறப்பு விழா மாநில செயற்குழு உறுப்பினர் மெடிக்கல் நாராயணன்,லட்சுமி ரியல் எஸ்டேட் நிறுவனர் சந்திரசேகரன் ஆகியோரின் முன்னிலையில் நல்லறம் அறக்கட்டளை நிறுவனர் SP அன்பரசன் துவக்கி வைத்தார்.உடன் சண்முகராஜா மகாலிங்கம்,FAIRA நிர்வாகிகள் கோவை மேற்கு மாவட்ட ரியல் எஸ்டேட் நல சங்கம், செல்வபுரம் வியாபாரிகள் சங்கம் மற்றும் கிரீன் சிட்டி டெவலப்பர்சின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாஜக சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்




கிருஷ்ணகிரி தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதி வார்டு எண் 9 பகுதியில் உள்ள சக்தி கேந்திர அளவில் அனைத்து பூத்களையும் ஒன்றிணைத்து ஆவலப்பள்ளி ரோடு பாரதியார் நகர் பேருந்து நிறுத்தம் பகுதியில் மாபெரும் நாளை நமதே! தமிழ் நாடும் நமதே!! என்பதன் அடிப்படையில் பாஜக மற்றும் தேசிய கூட்டணி கட்சிகள் அஇஅதிமுக, பாமக, தமாக, அமாமுக, மற்றும் தோழமை கட்சிகளை சார்ந்த தலைவர்கள் நிர்வாகிகள் G. பாலகிருஷ்ணன் ஜி பாஜக, M. நாகராஜ் ஜி பாஜக, கூட்டணி கட்சி தலைவர்கள்,கலந்து கொண்டு தெருமுனை பிரச்சாரத்தினை சிறப்பாக நடத்தினார்கள், என் நிகழ்வில் அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் சுமார் 75 பேருக்கு மேல் கலந்து கொண்டனர், அனைவருக்கும் நன்றி நாளை நமதே தமிழ்நாடு நமதே!!... என்றும் தேசியப் பணியில் வினோத் ராஜ், அயலக தமிழர் பிரிவு, மாவட்ட தலைவர், பாஜக, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421